தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:14.09.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்க தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் தேசிய அளவிலான மாநாடு

வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் இந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் சங்கம், ஹைதராபாத் இணைந்து நடத்தும் 37வது தேசிய வேளாண் சந்தைப்படுத்துதல் மாநாடு தொடக்க விழா செப்டம்பர் 14, 2023 அன்று கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, ஊட்டச்சத்து பாதுகாப்பு, அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்துதலை ஊக்குவிப்பதில் கூடுதல் ஆராய்ச்சி கவனம், குளிர் சேமிப்பு கிடங்கு, e NAM, மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகளின் தேவை ஆகியவற்றை வலியுறுத்தினார். மேலும், விவசாய உற்பத்தியாளர் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்த TNAU Agri Cart என்ற இணையதளத்தை இப்பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ளது என்பதையும், விவசாய உற்பத்தியாளர் குழுக்ககளுக்கு தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குதல் மற்றும் சந்தை நுண்ணறிவு பயிற்சி வழங்குதல் போன்ற முயற்சிகளையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது என்றும் கூறினார்.

இந்திய அரசின் விவசாய செலவுகள் மற்றும் விலைகள் ஆணையத்தின் தலைவரான முனைவர். விஜய் பால் ஷர்மா அவர்கள் சிறப்புரையின் போது 45 சதவீத பணியாளர்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளதாகவும், தற்போது நுகர்வோர் விருப்பத்தின் காரணமாக, உற்பத்தியை மையமாக கொள்ள வேண்டி உள்ளதாக கூறினார். மேலும், விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் காண வேண்டி உள்ளது என்றும் அவர் சுட்டிகாட்டினார்.

சந்தை உள்கட்டமைப்பை உருவாக்குவது, விவசாய சந்தைப்படுத்தலில் முழு மதிப்பு சங்கிலியை உருவாக்குவதில் தனியார் நிதியை ஈர்க்கவேண்டி உள்ளது என்று அவர் வலியுறுத்தினார். இந்திய அரசின் திட்டங்களான பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோனானா. பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா, பிரதமர் கிசான் சம்மன் நிதி ஆகிய திட்டங்களை எடுத்துரைத்தார். மேலும். சந்தைப்படுத்துதலில் செயல்திறனை மேம்படுத்தவும், நம்பகமான விலைக் கணிப்பு மற்றும் சந்தை தகவல்களை பெற செயற்கை நுண்ணறிவு இயந்திரம் என்ற டிஜிட்டல் தொழில்நுட்பம் அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியின் தலைமை விருந்தினரான புது டெல்லியில் உள்ள இந்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் முழு நேர உறுப்பினர் பேராசிரியர், முனைவர். ரமேஷ் சந்த், இந்தியாவில் கடந்த பத்தாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கிற்கு விவசாயித்தின் பங்களிப்பு மற்றும் வளர்ச்சி அதிகரித்துள்ளதை எடுத்துரைத்து, விவசாய சந்தைப்படுத்துதலில் சீர்திருத்தங்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் சங்கம், ஹைதராபாத்தின் செயலாளர் முனைவர் சத்தியநாராயணா, நாட்டில் விவசாய சந்தைப்படுத்தல் திறனை மேம்படுத்துவதற்காக மாநில வேளாண் பல்கலைக்கழங்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவு பகிர்வு தளத்தை வழங்குவதில் இந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் சங்கம், ஹைதராபாதின் பங்கு குறித்து பேசினார்.

இந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் சங்கம், ஹைதராபாத்தின் தலைவர் முனைவர். மகேந்திர தேவ், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அறுவடைப் பின்சார் தொழில்நுட்பங்களுக்கு கடன் வழங்குவதன் அவசியத்தையும் மற்றும் இடர் குறைப்பு வழிமுறையாக வலியுறுத்தினார்.

முனைவர். ஆர். சங்கர் நாராயண், நபார்டு விவசாயச் சவால்களுக்கு புதுமையான நிதியளிப்பு தீர்வுகளை கண்டுபிடிப்பதில் நபார்டின் பங்கை எடுத்துரைத்தார் மற்றும் விவசாய உற்பத்தியாளர் குழுக்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கு ஒரு தனி சேனலை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், மதுரை வேளாண் வணிக இன்குபேட்டர் மையம் 300க்கும் மேற்பட்ட விவசாய உற்பத்தியாளர் குழுக்களின் திறனை வளர்ப்பதில் பெரிதும் பங்களித்ததற்காக அவர் பாராட்டினார்.

முனைவர். சி. ராமசாமி, முன்னாள் துணைவேந்தர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், உணவு மதிப்பு சங்கிலியில் சந்தை செயல்திறனை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியின் தேவையை வலியுறுத்தினார்.

மூன்று நாள் மாநாட்டில் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் உட்பட சுமார் 150 பங்கேற்பாளர்கள் தொடக்க நிகழ்வில் பங்கேற்றனர்.

முன்னதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் இயக்குநர் முனைவர் டி. சுரேஷ்குமார் வரவேற்றார். முதல்வர் (வேளாண்மை) முனைவர். என். வெங்கடேச பழனிச்சாமி நன்றியுரை ஆற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்